**தலைப்பு 292 – கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 292 - கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 28 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 மே 28 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2. அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்படுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களின் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டு வரையான காலப்பகுதியில் குண்டசாலை செயற்கை கருவூட்டல் நிலையத்தினால் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட பசு விந்தனுக்குளுக்கான ரூபா 12,398,310 அறவிடப்பட்டிருக்கவில்லை. | பசு விந்தனுக்கள் விவசாயிகளுக்கு தொடர்ச்சியாக வழங்கப்படுகின்றதுடன் அதில் சேகரிக்கப்படுகின்ற வருமானம் மாகாண சபைக்கு அனுப்புவதற்கு காலம் எடுப்பதனால் நிலுவையொன்று எப்போதும் காணப்படுகின்றது. | காலப்பகுதிக்குரிய வருமானம் சரியான அறவிடப்படல் வேண்டும். |

## 2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | | | கணக்காய்வு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு** | **பெறுமதி ரூபா.** | **இணங்காமை** | | |
| (அ) அரசாங்க சேவைகள் ஆனைக் குழுவினால் 2009 பெப்ரவரி 20 திகதிய 1589/30 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி பத்திரிக்கையில் வெளியிடப்பட்ட நடைமுறை ஒழுங்கு விதிகள் கோவையின் XVIII பந்தியின் 193 ஆம் உப பந்தி | - | கடமைக்காலம் 05 ஆண்டுகளை கடந்த ஒவ்வொரு அரச உத்தியோகத்தர்களும் இடமாற்றத்திற்கு உட்பட வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாது பரீட்சிப்புக்கு உட்படுத்தப்பட்ட 04 உப அலுவலகங்களில் 07 ஆண்டுகள் தொடக்கம் 28 ஆண்டுகள் வரையான காலம் வரை 25 உத்தியோகத்தர்கள் ஒரே சேவை நிலையத்தில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | 05 ஆண்டுகளை கடந்த சில உத்தியோகத்தர்கள் இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்கப்பட்டிராமை மற்றும் இடமாற்றத்திற்கு பொறுத்தமான பிரதியீட்டு அலுவலகர் இல்லாமை | நடைமுறை ஒழுங்கு விதிகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| **(ஆ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை** | | | | |
| XV அதிகாரத்தின் 4 ஆம் உறுப்புரை | 6,199,106 | கல்வி, பயிற்சி அல்லது கடமை செயற்பாடுகளுக்காக வெளிநாடு சென்ற 08 உத்தியோகத்தர்கள் மீண்டும் கடமைக்கு வராமையின் காரணத்தினால் அத்தியாவசிய சேவைக் காலம் சேவையாற்றலுக்கு உடன்பட்டு ஒப்பந்தத்தினை மீறியமையினால் அறவிடப்பட வேண்டிய தண்டனை தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | 04 உத்தியோகத்தர்களிடமிருந்து தவணைகளாக காசு அறவிடப்படும். | தாபன விதிக் கோவை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்பு | | கணக்காய்வு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்குரியதாக தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திட்டமிடப்பட்ட 23 செயற்பாடுகளுக்குரிய 42 உப செயற்பாடுகளின் செயன்முறை 50 சதவீதத்தை விடவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன் 18 செயற்பாடுகளின் 24 உப செயற்பாடுகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | குறித்த காலவறைக்குள் அறிக்கையிடப்பட்ட நோய் புலனாய்வு அறிக்கைகள் மீண்டும் புலனாய்வு நடவடிக்கைகளுக்காக முன்வைக்கப்பட்டுள்ளதுடன் மற்றும் 04 செயற்பாடுகள் தொடர்பில் போதுமான நோய் நிலைமைகள் அறிக்கையிடப்படவில்லை. | திட்டமிடப்பட்ட செயற்பாடுகள் செயற்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | கொழும்பு கால்நடை தனிமைப்படுத்தல் மத்திய நிலையத்தினுள் போதுமான ஆய்வுக்கூட வசதிகள் இல்லாமையின் காரணத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்ட கால்நடை மற்றும் கால்நடை உணவு மாதிரிகள் 1,057 இல் 850 கன்னொருவ கால்நடை புலனாய்வு நிறுவனத்திற்கும், 187 வெலிசர கால்நடை புலனாய்வு மத்திய நிலையத்திற்கும் பெற்றுக் கொடுக்கப்பட்டு பரீட்சிக்கப்பட்டிருந்தது. இந்த புலனாய்வு நடவடிக்கைகளுக்கு நீண்ட காலம் எடுப்பதனால் கால்நடை மற்றும் கால்நடை உணவு இறக்குமதி மற்றும் ஏற்றுமதி நடவடிக்கைகளில் பாதகமான விளைவு ஏற்படுவதற்குள்ள சாத்தியக்கூறுகளை நிராகரிக்க முடியாது. | ஆய்வுக் கூடத்தினை மேம்படுத்துவதற்கு தேவையான ஆய்வுக்கூட மூலப்பொருட்களை கொள்வனவு செய்வதற்கு பொருத்தமான பெறுகை நடவடிக்கைகள் பின்பற்றப்படுமாறு நிலையத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தருக்கு ஆலோசனை பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. | போதுமான ஆய்வுக்கூட வசதிகள் தனிமைப்படுத்தல் மத்திய நிலையத்தினுள் தாபிக்கப்படல் வேண்டும். |

### 3.2 எதிர்பார்க்கப்பட்ட விளைவு மட்டத்தை பெற்றுக்கொள்ளப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் தெலஹெர ஆடுகள் இன விருத்தி மத்திய நிலையத்தின் குட்டிகள் பிறப்பு எண்ணிக்கை முறையே 182, 35 மற்றும் 108 வரை இன விருத்தி செயன்முறை வளர்ச்சி குறைந்த மட்டத்தில் காணப்பட்டமையினால் உயர் உற்பத்தி திறன் கொண்ட ஆடுகள் தேசிய ஆடு எண்ணிக்கைக்கு சேர்க்கும் நோக்கம் அடையப்பட்டிருக்கவில்லை. | கால்நடைகள் இடையே நிலவுகின்ற மந்த நிலை காரணத்தினால் மீண்டும் இந்த கால்நடைகள் மந்தைக்கு திரும்புவது குறைவாக காணப்பட்டமையினால் கருகட்டும் வீதம் குறைந்துள்ளது. | செயற்திட்டத்தின் திட்டமிடப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.3. எதிர்பார்த்த நலன்களை அடையாமை

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆண்டிற்கு 50 ரீதியில் 05 ஆண்டுகளுள் 250 ஆடுகளை களமிறக்கும் நோக்கில் 2019 ஆம் ஆண்டில் இம்புலந்தண்டை ஆடு இன விருத்தி மத்திய நிலையத்தினுள் போயர் வகை ஆடுகளின் இன விருத்தி செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்திற்காக 2023 ஆம் ஆண்டு இறுதியில் ரூபா 91,970,290 ஆன செலவீனமொன்று ஏற்கப்பட்டிருந்ததுடன் அக் காலத்தினுள் ரூபா 2,362,442 ஆன வருமானமொன்று மட்டும் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறே இந்த காலத்தினுள் 23 ஆடுகள் மட்டும் களத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்தமையினால் செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் அடையப்பட்டிருக்கவில்லை. | தனிமைப்படுத்தல் காலப்பகுதியினுள் B/T மற்றும் CAE எதிர்மக்கூறுகளின் முன்னிலையில் இறக்குமதி செய்யப்பட்ட ஆடு குழு அப்பப்போது பரட்சிக்கப்படதுடன் நோயினால் பாதிக்கப்பட்ட கால்நடைகள் கண்டறியப்பட்டதுடன் அதன் பிரகாரம் களத்திற்கு தற்போது கால்நடகள் விடுவது நிறுத்தப்பட்டுள்ளது. | நோய் கட்டுப்பாட்டுடன் செயற்திட்டத்தின் திட்டமிடப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | தெலஹெர ஆடுகள் இன விருத்தி மத்திய நிலையத்தில் கால்நடகளின் நோய் கண்டறியப்படல் மற்றும் நோய் கட்டுப்படுத்தப்படல் போன்ற கடமைகள் முறையான நிறைவேற்றப்பட்டு கால்நடைகளின் சுகாதார நிலை உறுதி செய்யப்படுவதற்கு நியமிக்கப்பட்டிருந்த வைத்தியர் இனவிருத்தி மத்திய நிலையத்தின் கடமைக்காக 2022 ஆம் ஆண்டில் 03 நாட்கள் என்ற மட்டுப்படுத்தப்பட்ட நாட்களும் மீளாய்வாண்டில் 23 நாட்ளும் மத்திய நிலையத்தினை அவதானித்திருந்தார். அதன் பிரகாரம் அவ் வைத்தியரிடத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட கடமை ஈட்டப்பட்டிராததுடன் அக் காலப் பகுதிக்குள் கால்நடைகள் மரணித்திருந்தமை முறையே 141 மற்றும் 35 ஆக உயர் அளவினை கொண்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டினுள் நிலவிய நெருக்கடியான பொருளாதார சூழ்நிலையினுள் பொது போக்குவரத்து பயன்படுத்துவதில் அசௌகரியத்தினை போன்று நிலவிய எரிபொருள் பற்றாக்குறை போன்ற காரணங்களினால் பிரதான அலுவலகத்திலிருந்து கால்நடை வைத்தியரொருவரின் சேவை தொடர்ச்சியாக அவ் தெலஹெர ஆடுகள் இன விருத்தி மத்திய நிலையத்திற்கு வழங்குவதற்கு முயொது போனது. | இன விருத்தி மத்திய நிலையத்திற்கு எளிதில் அனுகக்கூடிய வைத்தியரொருவருக்கு கடமை நியமிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | கரதகொல்ல விலங்கு பரிபாலன பாடசாலையில் 2018 ஆம் ஆண்டில் டிப்ளோமாதாரரொருவரை உருவாக்குவதற்கு அண்ணளவாக ஏற்கப்பட்ட செலவீனம் ரூபா 600,000 ஆக காணப்பட்டதுடன் 2019 – 2022 இடைப்பட்ட காலத்தினுள் அது 11 தொடக்கம் 18.5 இலட்சம் வரையில் அதிகரித்திருந்தது. ஒரு டிப்ளோமாதாரரொருவருக்காக ஆண்டொன்றிற்கு ஏற்கப்படுகின்ற கிரயம் குறைத்துக் கொள்வதற்கு பதிவு செய்யப்படுகின்ற மாணவர்கள் எண்ணிக்கையை அதிகரித்தல், பாடநெறியை விட்டுச் செல்லும் எண்ணிக்கையை குறைத்துக் கொள்வதற்கு செயற்படல் ஒவ்வொரு செலவின விடயங்களுக்காக ஏற்கப்பட்ட செலவீனத்தினை குறைத்துக் கொள்ளல் போன்ற செயற்பாடுகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | கருத்து முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | செலவீனத்தினை முகாமைத்துவம் செய்து பாடநெறிகளை விட்டுச் செல்லும் மாணவர்களை குறைத்துக் கொண்டு வினைத்திறனை அதிகரித்தல் வேண்டும். |

### 3.4 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16 (2) உறுப்புரையின் பிரகாரம் வருடாந்த நிதி கூற்றுகளுடன் வருடாந்த செயலாற்ற் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயலாற்றல் அறிக்கை, விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில்கள் அமைச்சினால் 2024.01.03 ஆந் திகதி அனுப்பப்பட்ட கோரிக்கையின் பிரகாரம் அவ் அமைச்சினால் அனுப்பப்பட்ட மாதிரிக்கு அமைவாக தயாரிக்கப்பட்டு அமைச்சின் செயலாளரினால் கணக்காய்வாளர தலைமை அதிபதிக்கு முன்வைப்பதற்கு அமைச்சின், திட்டமிடல் பிரிவிற்கு 2024.02.05 ஆந் திகதி அனுப்பப்பட்டுள்ளது. | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கரதகொல்ல விலங்கு பரிபாலன பாடசாலையில் ஒரு கல்வி ஆண்டிற்கு 100 மாணவர்கள் பயிற்சியளிப்பதற்காக தேவையான வளங்கள் காணப்படினும் 2019-2022 மற்றும் 2022-2024 ஆன இரு கல்வி ஆண்டுகளுக்காகவும் 137 மாணவர்கள் மட்டும் பதிவு செய்யப்பட்டதன் காரணத்தினால் வளங்கள் குறை பயன்பாட்டிற்கு உட்படுத்தப்பட்டிருந்தது. | இந்த பாடசாலையின் விரிவுரை மண்டபத்தினை விரிவுப்படுத்துவதன் ஊடாக ஒரு மாணவ குழுவிற்கு 75 மாணவர்கள் இணைத்துக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. | காணப்படுகின்ற சொத்துக்கள் பூர்ணமாக பயன்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | ரூபா 11,611,665 ஆன செலவீனமொன்று ஏற்கப்பட்டு 2021 சனவரி 04 ஆந் திகதி பணிகள் நிறைவு செய்யப்பட்ட தொடர் கல்வி நிறுவனத்தின் உணவகத்தின் மேல் மாடி மூன்று ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் தொடக்கம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்திற்கு பயன்படுத்தாது விளைவற்று காணப்பட்டது. | 2024 ஆம் ஆண்டில் அலுவலக உபகரணங்கள் மற்றும் வீட்டு பொருட்கள் கொள்வனவு செய்தலின் கீழுள்ள நிதியேற்பாடு ஊடாக இந்த தேவைப்பாடுகளில் பகுதியொன்று பெற்றுக் கொள்வதற்கு முயற்சிக்கப்படும். | எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்திற்கு தொடர்புடையதாக கட்டிடம் பயன்படுத்தப்படல் வேண்டும். |
| (இ) | மத்திய கோழிகள் ஆராய்ச்சி மத்திய நிலையத்தில் 5,181 கோழிகள் ஆன உயர் திறனில் நடத்திச் செல்லப்படக் கூடிய கோழிகள் வீடு மற்றும் வளங்கள் காணப்பட்ட போதிலும் மீளாய்வாண்டினுள் 1,680 கோழிகள், அதாவது 32 சதவீதத்திற்கு குறைந்த மட்டத்தில் நடத்தி சென்றதன் ஊடாக மத்திய நிலையம் 68 சதவீதம் குறைபயன்பாட்டிற்கு உட்பட்டிருந்தது. | பண்ணையில் 5000 கோழிகளுக்கு மேலாக வளர்ப்பதற்கு இடவசதிகள் காணப்படுகின்ற போதிலும் வித்து களஞ்சியத்தின் கொள்திறன் 8400 முட்டைகளுக்கு மட்டுமாக இருப்பதனால் வித்து களஞ்சியத்திற்கு தேவையான setter இயந்திரம் கொள்வனவு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | கோழி ஆராய்ச்சி மத்திய நிலையம் உயர் திறனில் நடத்திச் செல்லப்படல் வேண்டும். |

## 3.6 நிதி சர்ச்சை தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கன்னொருவ கால்நடை ஆராய்ச்சி நிறுவனத்தின் பொறுப்பாளர் (சரப்) இனால் 2018 தொடக்கம் 2023 யூலை மாதம் வரை காலத்தினுள் நாளாந்தம் சேகரிக்கப்படுகின்ற வருமானத்தில் ரூபா 14,749,160 ஆன தொகை பிரதான அலுவலகத்தின் பிரதான பொறுப்பாளருக்கு கையளிக்காது தனிப்பட்ட பயன்பாட்டிற்கு பெற்றுக் கொள்ளப்பட்டு மோசடியொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த நிதி மோசடி தொடர்பாக நிதி 104(4) முழுமையான பரிசோதனை அறிக்கை மீளாய்வாண்டு இறுதி திகதி வரையிலும் வெளியிடப்பட்டிருக்கவில்லை. | கருத்து முனவைக்கப்பட்டிருக்கவில்லை. | நிதி பிரமாணம் பிரகாரம் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

## 3.7 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதி திகதிக்கு தயாரிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் பிரகாரம் 18 சந்தர்ப்பங்களுக்குரிய கூட்டுத்தொகை ரூபா 21,299,643 ஆன நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நி.பி 104(3) இன் கீழ் நட்டமொன்று தொடர்பாக ஆரம்ப ஆய்வு அறிக்கைகள் மற்றும் 104(4) இன் கீழ் நட்டம் தொடர்பான இறுதி அறிக்கை பெற்றுக் கொள்ளல் பிரகாரம் மேல் நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | நிதி பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.8 முகாமைத்துவ நலிவுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பொல்கொல்ல கால்நடை ஆய்வுக்கூடத்திற்காக 2022 ஆகஸ்ட் 15 ஆந் திகதி ரூபா 96,548,000 இற்கு தானியங்கி உயிர் சிகிச்சை இயந்திரமொன்று கொள்வனவு செய்யப்பட்டு பொருத்தப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது விளைவற்று காணப்பட்டது. | 2021 ஆம் ஆண்டின் பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் தொழிநுட்ப மதிப்பாய்வு குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. | தேவையின் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டு இயந்திரத்தை பயன்படுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கரதகொல்ல விலங்கு பரிபாலன பாடசாலையின் 06 கல்வி ஆண்டுகளின் தகவல்கள் பிரகாரம் டிப்ளோமா பாடநெறியினை விட்டுச் சென்ற மாணவர்களின் எண்ணிக்கை 27 சதவீதம் என்ற உயர் மதிப்பினை கொண்டிருந்ததுடன் பாடநெறியினை விட்டுச் சென்ற மாணவர்களுக்காக ஏற்கப்பட்ட செலவீனம் விளைவற்ற செலவீனமாக காணப்பட்டது. | பாடநெறிக்கு பதிவு செய்யப்பட்டதன் பின்னர் வேறு உயர் கல்விக்காக மற்றும் வெவ்வேறு தொழில் சந்தர்ப்பங்களுக்காக ஈடுபட்டமையின் காரணத்தினால் பாடநெறியினை விட்டுச் செல்லும் மாணவர்களில் திணைக்களம் அவர்களுக்காக ஏற்ற செலவீனத்தினை அறவிடுவதற்கு ஒப்பந்தமொன்று தயாரித்து சட்ட பிரிவிற்கு முன்கைக்கப்பட்டுள்ளதுடன், அதற்காக முறையான அங்கீகாரமொன்று இதுவரையில் பெறப்படவில்லை. | பாடநெறியினை விட்டுச் செல்லும் மாணவர்கள் எண்ணிக்கையை குறைத்துக் கொள்வதற்கு தொடர்புடைய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 03 நிலைப்பேறான அபிவிருத்தி நோக்கங்களுக்கான 06 இலக்குகளை அடைவதில் திணைக்களம் நடவடிக்கை எடுத்திருந்ததுடன் அதில் 02 இலக்குகளின் செயன்முன்னேற்றம் 50 உம் 74 உம் சதவீதங்களுக்கு இடையேயான மட்டத்தில் காணப்பட்டது. | நிலவிய பொருளாதார நெருக்கடி நிலையின் கீழ் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைய முடியாதபோதிலும் முறையாக இலக்குகளை அடைவதற்காக தேவைப்படுகின்ற மூலோபாய நடவடிக்கைகள் தயயாரிக்கப்பட்டு வருகின்றது. | நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைந்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 5. நல்லாட்சி

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்காய்வு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மத்திய கோழிகள் ஆராய்ச்சி மத்திய நிலையத்தின் பண்ணையில் கோழி குஞ்சுகள் விண்ணப்பதாரிகள் பதிவு செய்தல் முறையாக மேற்கொள்ளப்படாமை மற்றும் குஞ்சுகள் வழங்கும் போது ஒரே வாடிக்கையாளர் குழுவிற்கு கோழி குஞ்சுகள் | குஞ்சுகளை கோரும் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் நியாயமாக வழங்குதல் பொறுப்பான போதிலும் கேள்விக்கு ஏற்ற வழங்கல் | அனைத்து விண்ணப்பதாரிகள் இடையே முறையான முறைமையொன்றின் கீழ் குஞ்சுகள் வழங்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே அதிகமாக கோருபவர்களுக்கு வழங்குவதற்கும் குறைந்தளவு கோரும் விண்ணப்பதாரிகளுக்கு குஞ்சுகள் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை அவதானிக்கப்பட்டதுடன் 2023 மார்ச் மாதம் தொடக்கம் செப்தெம்பர் மாதம் வரை காலத்தினுள் ஒரே நபருக்கு 500 கோழி குஞ்சுகள் வீதம் 12,000 வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | இல்லாமையினால் அனைத்து வாடிக்கையாளர்களின் தேவைகளும் நிறைவேற்றப்பட முடியாது. | |

## 6. மனிதவள முகாமைத்துவம்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்காய்வு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளவாரான பதவியணி இணக்கம் செய்யும் போது 152 பதவி வெற்றிடங்கள் காணப்பட்டன. திணைக்களத்தின் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் 16 பதவிகளில் 61 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அவ் வெற்றிடங்களில் 08 பணிப்பாளர் பதவிகளும், 07 கால்நடை புலனாய்வு உத்தியோகத்தர்கள் பதவிகளும், 16 கால்நடை ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவிகளும், 09 கால்நடை வைத்திய அதிகாரி பதவிகளும் காணப்பட்டன. முதன்மை மட்டத்தில் 33 பதவி வெற்றிடங்கள் காணப்பட்டமையினால் வெளிகள பணிகள் மேற்கொண்டு செல்வதில் சிரமங்கள் எழுந்திருந்தது. | பதவி வெற்றிடங்களுக்காக உத்தியோகத்தர்கள் நிரந்தரமாக நியமிக்கப்படும் வரையில் கடமை மேவுகைக்காக உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளது. | தேவைப்பாடு கருத்திற் கொள்ளப்பட்டு வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். |